விரும்புகிறேன். அந்தத் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய செங்கரை கிராமத்தில் அண்மையிலே புதிய தொழிற்பேட்டை தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் 95-ம், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் மனைகள் 20-ம் இருக்கின்றன. காலியாக உள்ள தொழில் மனைகள் மொத்தம் 75 உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 89 மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

89—

பேருந்து வசதி

***2730—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயத்திலிருந்து சென்னைக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தினசரி இரவு 8-00 மணிக்கு ஓர் அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் பயணத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நியாயமாகச் செயல்படுகின்ற வகையிலே, ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு கணப் பொழுதும் உழைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த பாடம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மக்கள் ஆட்சியினுடைய மணிமண்டபம். அண்ணா சாலையிலே ஆண்டிகள் கூடி கட்டுகிற மடம் அல்ல. நாம் வாங்குகிற சம்பளத்திற்கு உகந்ததாக, அதற்கு நியாயம் கற்பிக்கின்ற வகையிலே இந்த அவையினுடைய விவாதங்களிலே கலந்துகொண்டு, நம்மைத் தேர்ந்தெடுத்த மக்கள் எடுத்து வைக்கின்ற கோரிக்கைகள் குறித்துப் பேசி, அவற்றை நிறைவேற்றுகின்ற ஆணைகளை பெற்றுச் செல்வதுதான் ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய கடமை. வெளிநடப்பு செய்வதிலே சாதனை படைக்க வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு மத்தியிலே, என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காகக் குரல் கொடுத்து, திட்டங்களைப் பெற்றுச் செல்வதிலே சாதனை படைக்க வேண்டுமென்று நினைப்பவன் நான்.

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலே போக்குவரத்துத் துறை சம்பந்தமாக ஒரு கோரிக்கை இருக்கிறது. அது என்னவென்றால், நாகர்கோவிலிருந்து புதுச்சேரிக்கு ஓர் அரசு விரைவுப் பேருந்து செல்கிறது. அந்தப் பேருந்து என்னுடைய தொகுதியை ஒட்டிய மன்னார்புரம் என்ற ஊர் வழியாகச் செல்கிறது. இடையிலே 9 கிலோ மீட்டர் தூரம் வளைந்து திசையன்விளையை தொட்டுச் சென்றால் பயனுள்ளதாக இருக்கும். எங்களுடைய தொகுதியிலே வியாபாரிகள் நிறைந்திருக்கிறார்கள். திசையன்விளை பகுதி வியாபாரிகள் நிறைந்த பகுதி. கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகச் செல்கிற அந்தப் பேருந்து தஞ்சாவூர் தாண்டி பாண்டிச்சேரி வரை செல்கிறது. எனவே, அந்த வகையிலே பொதுமக்களுடைய, மாணவர்களுடைய, வியாபாரிகளுடைய நலன்களைக் கருதி அந்தப் பேருந்தை திசையன்விளை வழியாக இயக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்னொரு கோரிக்கை. எங்களுடைய தொகுதியிலே ஆத்தங்கரை பள்ளிவாசல் என்று ஓர் இஸ்லாமிய யாத்ரீகர்கள் தலம் இருக்கிறது. அங்கு கேரளாவிலிருந்து நிறைய யாத்ரீகர்கள் வருகின்றார்கள். அதுபோன்று வரும் யாத்ரீகர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு திருவனந்தபுரத்திலிருந்து ஓர் அரசு விரைவுப் பேருந்தை இயக்கிட வேண்டும். அந்தப் பேருந்தை நிறுத்துவதற்கான வசதி திசையன்விளையிலேதான் இருக்கிறது. எனவே, திசையன்விளை வரை அந்தப் பேருந்தை இயக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்முன் என்னுடைய தொகுதி மக்களுடைய குரலாக ஒலிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்தின் வழித்தடத்தை மாற்றி இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற வழித்தடங்களிலே மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் இருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர் கோரிய அந்த வழித்தடத்திலே பேருந்தை இயக்குவதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அவர் கேரள மாநிலம், திருவனந்தபுரத்திலிருந்து பேருந்தை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். பேருந்துகளை இயக்குவது தொடர்பாக இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தம் இருக்கிறது. அந்தந்த மாநிலங்களுக்குள் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துகளை இயக்க வேண்டும்; கேரளாவிற்குள் நாம் எவ்வளவு தூரம் பேருந்துகளை இயக்க வேண்டுமென்றும், தமிழகத்திற்குள் அவர்கள் எவ்வளவு தூரம் பேருந்துகளை இயக்க

2018 மே 30]

வேண்டுமென்றும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கின்றன. அதனடிப்படையிலே, அவருடைய கோரிக்கையை பரிசீலித்து, அதற்கு வாய்ப்புகள் இருக்குமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்த வழித்தடத்திலே பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வந்தாய், சென்றாய் என்றால், உந்தன் வாழ்வு சிறக்காது; நீயும் வந்தாய், தொண்டால் சிறந்தாய் என்றால், இந்த வையம் மறக்காது' என்றார் புலவர் புங்கனேரியான். அவருடைய வைர வரிகளுக்கு இலக்கணமாக, உலகெங்கும் குடி கொண்டிருக்கின்ற தமிழர்களுடைய இதயங்களில் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியை, நாடு போற்றுகின்ற ஆட்சியை, தமிழர்கள் நேசிக்கின்ற ஆட்சியை, தமிழர்களின் உரிமையைக் காக்கின்ற ஆட்சியை நடத்துகிற தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, இஸ்லாமியர்களும், கிருத்துவர்களும் நிறைந்திருக்கக்கூடிய, சிறுபான்மையின மக்களை உள்ளடக்கியிருக்கக்கூடிய ஒரு தொகுதியாகும். அந்தத் தொகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில், காட்டுமன்னார்கோவிலிலிருந்து மணல்மேட்டிற்கும் மற்றும் மயிலாடுதுறை வழியாக வேளாங்கண்ணிக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 மே 30

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய வழித்தடத்திலே பேருந்தை இயக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே அந்த வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், புதிய வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தினந்தோறும் டீசலின் விலை உயர்ந்து கொண்டே இருக்கின்ற காரணத்தால், போக்குவரத்துக் கழகங்களுடைய பொருளாதார சூழ்நிலை என்னவென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தக் கோரிக்கையை எடுத்துச் சென்று, எந்தெந்த வழித்தடங்களிலே புதியதாக பேருந்துகள் வேண்டுமோ, அதை ஆய்வு செய்து, அவர்கள் கோருகின்ற வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்குவதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர் 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, நம்மை விட்டுப் பிரிந்தாலும், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவடிகளுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்துகின்ற தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துணையாய் இருந்து இந்த அரசை நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தரங்கம்பாடியிலிருந்து பெங்களூருவுக்குச் செல்வதற்கு குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை இயக்குவது குறித்த என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக*

2018 மே 30]

இருக்கின்ற காரணத்தினாலே, அவசியம் அந்தப் பேருந்தை அங்கு இயக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கர்நாடகா மற்றும் தமிழகத்திற்கும் இடையேயான வழித்தடங்களிலே பேருந்தினை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களும், கொடுத்திருக்கின்ற அந்த வழித் தடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருங்காலங்களில் அந்தப் புதிய வழித்தடங்களில், குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து வரும். அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின், அதற்கு மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, அவர் கூறிய வழித்தடங்களில் பேருந்தினை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

தங்கும் விடுதி

***6372—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணி அம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?